குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, அதைக் கருத்தில்கொண்டு, வருங்காலத்திலே அறந்தாங்கி கோட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு என்னென்ன நடவடிக்கைகள் தேவையோ, என்னென்ன விதிமுறைகள் இருக்கின்றனவோ தேவைப்பட்டால் அந்த விதிமுறைகளையெல்லாம் சற்று தளர்த்தி, வாரியத்தின் நிதி நிலைமை சீரானவுடன், அறந்தாங்கி கோட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மீண்டும் ஒரு முறை உறுதியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 471, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். பார்த்திபன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

471—

குடிநீர் வழங்கல்

***18085—திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேட்டூர் தொகுதி, பி.என். பட்டி பேரூராட்சி பகுதியில் போதுமான அளவு குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

மேட்டூர் தொகுதியிலுள்ள பி.என். பட்டி பேரூராட்சிக்கு, பி.என். பட்டி- வீரக்கல்-புதூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம், காடையான்பட்டி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மற்றும் ஆத்தூர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஆகிய 3 கூட்டுக் குடிநீர்த் திட்டங்களின்மூலமாக நாளொன்றுக்கு 20.20 இலட்சம் லிட்டர் குடி தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. பி.என். பட்டி பேரூராட்சியில் 27 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு, பகிர்மானக் குழாய்கள்மூலம் நபர் ஒருவருக்கு 80.63

2013 மே 13]

லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இப்பேரூராட்சியில் குடிநீர்ப் பற்றாக்குறை இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. எஸ்.ஆர். பார்த்திபன், இருக்கையில் இல்லை.*

வினா வரிசை எண் 472, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

472—

நவீன அரிசி ஆலை

***7109—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்துறைப்பூண்டியில் நவீன அரிசி ஆலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருத்துறைப்பூண்டியில் நவீன அரிசி ஆலை தொடங்குவதற்கான கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. என்றாலும்கூட, தொழில்முனைவோர்கள் முன்வருவார்களேயானால், அரசினுடைய பல்வேறு மானியத் திட்டங்கள் அவர்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

திரு. கே. உலகநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில் வட்டாரப்*